கவனிக்க.– 10.10.2025 ஆம் திகதிய 2458 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2459 - 2025 ඔක්තෝබර් මස 17 වැනි සිකුරාදා - 2025.10.17

2459 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


காணி நிர்ணய அறிவித்தல்கள் -
முன்னறிவித்தல்கள் -
இறுதிக் கட்டளைகள் -
காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் -
அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் -
மேல் மாகாணம் -
மத்திய மாகாணம் -
தென் மாகாணம் -
வட மாகாணம் -
கிழக்கு மாகாணம் -
வடமேல் மாகாணம் -
வடமத்திய மாகாணம் -
ஊவா மாகாணம் -
சப்பிரகமுவ மாகாணம் -
சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் -
நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் -
மேல் மாகாணம் -
மத்திய மாகாணம் -
தென் மாகாணம் -
வட மாகாணம் -
கிழக்கு மாகாணம் -
வடமேல் மாகாணம் -
வடமத்திய மாகாணம் -
ஊவா மாகாணம் -
சப்பிரகமுவ மாகாணம் -
காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் -
காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் 486
காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் -
நானாவித காணி அறிவித்தல்கள் 486


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, நவெம்பா மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

485 - B 82729 - 403 (2025/10)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வழங்கல் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆவது பந்தி) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாணத்தின், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் இரேசா லியனகம ஆகிய நான், காணி அபிவிருத்திச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி மூலம் ......... ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் ஹம்/வ/10/45748 உடைய வழங்கல் பத்திரத்தின் உரிமையாளர் ஆகிய நெட்டொல்பிட்டிய பட்டிய பொலவில் வசிக்கும் கன்கானம் கமகே சுவந்தரர் என்பவருக்கு வழங்கப் பட்டு தங்காலை மாவட்டப் பதிவுக் காரியாலய இலக்கம் 3733 இன் கீழ் 1997.09.09 ஆந் திகதி பதிவு செய்யப் பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணிக்கு பிரதியீட்டாளராக ஆவதற்கு சட்டபூர்வமான ஒருவர் இல்லாமையின் காரணமாக அல்லது உரிமை உள்ள ஒருவர் இருப்பினும் அவர் பிரதியீட்டாளராக வருப்பமின்மையினால் பிரதியீட்டாளர் தன்மைக்கு ஒருவரை நியமனம் செய்யவதற்கு இல்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளதால் அந்த வழங்கல் பத்திரத்தை உரிய சட்டத்தின் 104 ஆவது பந்தியின் படி இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துச் செல்கின்றோம் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.11.07 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

ஹம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தின் தங்காலை பிரதேச செயலாளர் பிரிவின், தெற்கு கிருவா பத்துவின்/ கோறளையின் பட்டியபொல மேற்கு கிராம அதிகாரி பிரிவின், பட்டியபொல என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான அளவையாளர் நாயகம் மூலம் தயாரிக்கப்பட்ட இலக்கம் 259 உடைய ரேகை அறிக்கையின் இலக்கம் ................ உடைய காணித் துண்டாகக் காட்டப் பட்டுள்ளதுமான, அளவில் ஹெக்டயர்/ 02 ஏக்கர் 00 றூட், 00 பர்சஸ் விசாலமுடையதுமான, பின்வரும் வகையில் எல்லையிடப் பட்ட அரசாங்கக் காணி :-

வடக்கு : டெனீ கரணாயக்கவுடைய காணி;
கிழக்கு : மிரிஸ் கொரட்டுவ காணி;
தெற்கு : கே. கே. லீலாவதீயுடைய காணி;
மேற்கு : கே. கே. கரோலிஸ் உடைய காணியும் ஆகும்.

இரேசா லியனகம,
பிரதேச செயலாளர்.
தங்காலை.

பிரதேச செயலகம்,
தங்காலை,
2025, மே 16.

10 - 154

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/78845.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NWP/PLC/L9/GW/LTL/17.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

குருநாகல் மாவட்டத்தின் கனேவத்த பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 432, ஹெட்டிகம கிராம அலுவலர் பிரிவின் கல்வெவ கிராமத்தின் இ. கி. ப. 2755 இன் துண்டு இலக்கம் 56 இன் ஒரு பகுதியைக் காண்பிப்பதற்காக குடியிருப்பு அலுவலரால் வரையப்பட்ட 2025/03 ஆம் இலக்க தோராயமான சுவட்டு வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 இனால் காண்பிக்கப்பட்டுள்ள 03 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வர்த்தக நடவடிக்கைகளுக்காக திரு. வானபுர தேவகே வெல்கம் வானபுர என்பரால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன.

வடக்கு: இ. கி. ப. 2755 இன் துண்டு இலக்கம்: 11 வயல் காணி மற்றும் அந்த வயல் காணிக்கான பிரதேச வழி;
கிழக்கு: இ. கி. ப. 2755 இன் துண்டு இலக்கம்: 11 மற்றும் துண்டு இலக்கம் 57;
தெற்கு: இ. கி. ப. 2754 பொத்தான கிராம எல்லை;
மேற்கு: இ. கி. ப. 2754 பொத்தான கிராம எல்லை மற்றும் துண்டு இலக்கம் 7 பிரதான பாதை.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** : முப்பது (30) வருடங்கள் (2025.07.23 முதல் 2055.07.22 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைத் தொகை** :- 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா (ரூ. 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை** : தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(இ) இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர் (வடமேல்)/ பிரதேச செயலாளர் மற்றும் கருத்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள / நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிலைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகைகைய முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.07.23 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் என்பவற்றுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

(ஒ) குத்தகை செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாதிருக்கும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்டனை வட்டி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

ஆர். டீ. எல். சமிந்து லக்ஷான் ஜயரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
''மிஹிகதத மெதுர'',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, ஒற்றோபர் 07.

10 - 233

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/74920.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: SPLC/GAL/5/9/3/269.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

காலி மாவட்டத்தின் நாகொடை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 209A, யட்டலமத்த கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் யட்டலமத்த கிராமத்தில் ஆ. ப. காலி 4191 இன் துண்டு இலக்கம் 01 ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள 0.0506 ஹெக்யேடர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை சங்க நடவடிக்கைக்காக வரையறுக்கப்படாத யட்டலமத்த சிக்கனம் மற்றும் கடன் வழங்கல் கூட்டுறவு சங்கத்தினால் (சணச) நீண்ட காலக் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: ஆ. வ, ப. A 1983 இன் துண்டு இலக்கம் 31 மற்றும் 32;
கிழக்கு: ஆ. வ. ப. கா. 797 இன் துண்டு இலக்கம் 49 மற்றும் 48;
தெற்கு: ஆ. வ. ப. கா. 797 இன் துண்டு இலக்கம் 48, 47 மற்றும் எல். விக்கிரமாரச்சி மற்றும் மேலும் சிலர் உரிமை கோரும் அமுகனத்தே வத்த;
மேற்கு: எல். விக்கிரமாரச்சி மற்றும் மேலும் சிலர் உரிமை கோரும் அமுகனத்தே வத்த மற்றும் ஆ. வ. ப. A 1983 இன் துண்டு இலக்கம் 31.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.07.23 முதல் 2055.07.22 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைத் தொகை** :- தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

**தவணைத் தொகை** : அறவிடப்பட மாட்டாது;

(இ) இந்தக் காணியை வரையறுக்கப்படாத யட்டலமத்த சிக்கனம் மற்றும் கடன் வழங்கல் கூட்டுறவு சங்கத்தின் அலுவல்கள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) காணியின் அனுபவ உரிமை கையளிக்கப்பட்டு ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டடுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.07.23 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகை செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாதிருக்கும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்டனை வட்டி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, ஒற்றோபர் 07.

10 - 234

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது